நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

# கரும்பு உற்பத்தியை அதிகரிக்க நதி நீர் இணைப்பு அவசியம்: நா.மகாலிங்கம்

First Published : 20 Aug 2010 01:55:57 AM IST




அகில இந்திய சர்க்கரை தொழில்நுட்பக் கருத்தரங்கை சென்னையில் வியாழக்கிழமை குத்துவிளக்கேற்றி தொடங்கிவைக்கிறார் சக்தி குழுமத்தின் தலைவர் நா. மகாலிங்கம். உட

சென்னை, ஆக. 19: இந்தியாவில் கரும்பு, சர்க்கரை உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமானால் நதி நீர் இணைப்பு அவசியம் என சக்தி குழுமத் தலைவர் நா.மகாலிங்கம் தெரிவித்தார்.

மூன்று நாள்கள் (ஆக.19, 20, 21) நடைபெறும் அகில இந்திய சர்க்கரை தொழில்நுட்பக் கருத்தரங்கு சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் வியாழக்கிழமை தொடங்கியது. கருத்தரங்கைத் துவக்கி வைத்து சக்தி குழுமத்தின் தலைவர் நா.மகாலிங்கம் பேசியதாவது:

இன்றைய பொருளாதாரச் சூழ்நிலையில் சர்க்கரை ஆலைகள் தனித்து செயல்படுவதற்குப் பதிலாக எத்தனால் வடிப்பாலையும் கரும்பு சக்கையிலிருந்து மின்சக்தி உற்பத்தி செய்யும் மையமும் இணைந்து செயல்பட வேண்டும். அப்போதுதான் சர்க்கரை ஆலைகள் லாபகரமாக இயங்கும்.

பிரேசில் நாட்டில் கடந்த 40 ஆண்டுகளாக இதுபோன்ற கூட்டு முயற்சியால்தான் அங்குள்ள சர்க்கரை ஆலைகள் லாபகரமாக இயங்கி நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தியுள்ளன.

இந்தியாவில் கரும்பு விவசாயத்துக்கு பயிர் செய்ய உகந்த நிலத்தின் பரப்பளவை 17.5 கோடி ஹெக்டேராக உயர்த்தினால், கரும்பு உற்பத்தி அதிகரித்து சர்க்கரை 2.5 கோடி டன்; வெல்லம் 50 லட்சம் டன் என்ற அளவில் உற்பத்தி பெருகும். மேலும் இதனால் 30 ஆயிரம் கோடி லிட்டர் எத்தனாலும் அதே அளவு யூனிட்டுகள் மின்சாரமும் கிடைக்கும். கரும்பு உற்பத்தியில் இதுபோன்ற

முயற்சிகளை மேற்கொள்ள நதி நீர் இணைப்பு அவசியம். நதி நீர் இணைப்பினால் ஏற்படக்கூடிய உத்தேச செலவுத் தொகை ரூ.150 லட்சம் கோடியை கரும்பு மற்றும் அதன் தொடர்ச்சியாக உருவாக்கப்படும் பொருள்களின் மூலம் 10 ஆண்டுகளில் திரும்பப் பெற்று விடலாம்.
இவற்றோடு, நாட்டின் பொருளாதாரத்தை நிர்ணயிக்கும் பெட்ரோல் போன்ற எரிபொருள்களுக்கு மாற்றாக எத்தனாலையும் மின்சாரத்தையும் உற்பத்தி செய்து மின் பற்றாக்குறையினையும் நிவர்த்தி செய்யலாம் என்றார்.

தமிழ்நாடு சர்க்கரைத் துறை ஆணையர் விக்ரம் கபூர்: நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த உதவும் இதுபோன்ற கருத்தரங்கை சென்னையில் நடத்துவற்காக தமிழக அரசு சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.கடந்த 80 ஆண்டுகளில் கரும்புப் பயிர்த் தொழில் பல்வேறு ஏற்ற இறக்கங்களைக் கண்டு வருகிறது. இந்த நிலை மாறி இனி தொடர்ந்து ஏற்றம் மட்டுமே இருக்க வேண்டும்.

இந்தியாவில் ஆண்டுக்கு 10 சர்க்கரை ஆலைகள் புதிதாகத் திறக்கப்படுகின்றன. அதே சமயம் நஷ்டத்தில் இயங்கும் சுமார் 8 ஆலைகள் மூடப்படுகின்றன. சர்க்கரை ஆலைகள் மூடப்படும் நிலையை மாற்றி அந்தத் துறையின் வளர்ச்சியை சீராக்க வேண்டும். சர்க்கரை ஆலைகளின் வளர்ச்சி கரும்பு உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டது. கரும்பு உள்ளிட்ட விவசாயப் பொருள்களின் உற்பத்திக்கு சுற்றுப்புற சூழலின் தன்மை மிகவும் அவசியம். அதைப் பாதுகாப்பது நம் அனைவருடைய கடமை. கரும்பு உற்பத்தி, தொழிலாளர்களை நம்பியே உள்ளது. குறைந்த கூலி காரணமாக இந்தத் தொழிலில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. இந்தப் பிரச்னையை சம்பந்தப்பட்ட சங்கங்கள் அரசின் ஆலோசனை, உதவியுடன் சுமுகமாகத் தீர்க்க வேண்டும் அதே போல இந்திய சர்க்கரை ஆலைகளின் தரத்தை தொழில்நுட்ப ரீதியாக உயர்த்த வேண்டும் என்றார்.

முன்னதாக இந்திய சர்க்கரைத் தொழில்நுட்ப கூட்டமைப்பின் தலைவர் ஜி.எஸ்.சி.ராவ், சர்க்கரை தொழில்நுட்ப வல்லுநர்களின் தலைவர் டி.சி.எஸ்.ரெட்டி, கர்நாடக சர்க்கரைத்துறை ஆணையர் ஏ.கே.மோனப்பா உள்ளிட்டோர் சிறப்புரையாற்றினர். கரும்பு உற்பத்தி, சர்க்கரை ஆலை மேம்பாடு குறித்து சிறப்பு கண்காட்சியும் நடைபெறுகிறது. ஆக.21-ம் தேதி வரை நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் நாட்டின் அனைத்து மாநிலங்களிலிருந்தும் 1,300-க்கும் மேற்பட்ட தொழில்நுட்ப வல்லுநர்கள் கலந்துகொண்டு 60-க்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் விவாதிக்கப்படுகின்றன.

**பி.டி. பருத்தியில் மகசூலை அதிகரிப்பது எப்படி?**

First Published : 19 Aug 2010 01:21:16 PM IST

தருமபுரி, ஆக.18: தருமபுரி மாவட்ட விவசாயிகள் பி.டி. பருத்தியில் களைக் கொல்லி மேலாண்மையை கடைபிடித்தால், அதிக மகசூல் பெறலாம் என்று தருமபுரி மாவட்ட வேளாண் இணை இயக்குநர் மனோகரன் யோசனை தெரிவித்துள்ளார்.

முளைக்கும் முன்பு செயல்படும் களைக் கொல்லிகள், களை விதை முளைக்கும் போதே, அதன் முளை வேர்கள் வழியே உள்ளே சென்று அழிக்கின்றன. இவ்வகை களைக் கொல்லிகளைப் பயன்படுத்தும்போது, மண்ணில் போதுமான ஈரப்பதம் அவசியம்.

இந்த களைக் கொல்லிகளை குருணையாக இருந்தால், மணலுடன் கலந்து சீராக தூவ வேண்டும்.

களைச் செடிகள் முளைத்து வளர்ந்த பின்பு தெளிக்கப்படும் களைக் கொல்லிகள் இலைகள் மூலம் உறிஞ்சப்பட்டு, மற்ற பாகங்களுக்கு ஊடுருவிச் சென்று களைகளை அழிக்கின்றன.

இத்தகைய செடிகள் முளைப்பதற்கு முன்பு தெளிப்பதாக இருந்தால், ஹெக்டேருக்கு 3.50 லிட்டர் பென்டமெத்தலின் (ஸ்டாம்பு) அல்லது அளோக்குளோர் 2.5 லிட்டர் அல்லது டையூரான் 1.25 லிட்டர் உள்ளிட்டவற்றில் ஏதாவது ஒன்றை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து பருத்தி விதைத்த 3 முதல் 5 நாள்களுக்குள் கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

தெளித்த பின்பு அந்த தெளிப்பானை நன்றாகக் கழுவ வேண்டும். தண்ணீரை மட்டும் நிரப்பி ஒரு டேங்க் தரிசாக உள்ள நிலங்களில் அடிப்பதால் தெளிப்பான் பகுதியில் உள்ள களைக் கொல்லி நஞ்சை சுத்தமாக நீக்கலாம். இல்லையெனில் மருந்து கலந்து அடிக்கும்போது, களைக் கொல்லியின் மீதமுள்ள நஞ்சு காரணமாக பயிர் கருகும் சூழல் ஏற்படும்.

வளர்ந்த களைச் செடிகளை, பாராக்குவாட் அல்லது டைக்குவாட் களைக்கொல்லியைப் பயன்படுத்தி கட்டுப்படுத்தலாம். களைக் கொல்லிகளைப் பயன்படுத்தும்போது பருத்தியில் ஊடு பயிராக பயறு வகைகள் இருந்தால், பென்டமெத்தலின் (ஸ்டாம்பு) உபயோகிப்பதை தவிர்க்க வேண்டும். களைகளை அழிக்க களை எடுக்கும் கருவியை பயன்படுத்த வேண்டும் இவ்வாறு செய்தால் பி.டி. பருத்தியில் அதிக மகசூல் பெறலாம் என்றார் மனோகரன்.

**ஒசூரில் குண்டுமல்லி கிலோ |400 முழம் | 20-க்கு விற்பனை**

First Published : 19 Aug 2010 01:16:46 PM IST

ஒசூர், ஆக. 18: ஒசூரில் குண்டுமல்லி பூ கிலோ | 400 என்ற விலையை எட்டியுள்ளது. இதனால் முழம் பூ | 20-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வரலட்சுமி பண்டிகை வெள்ளிக்கிழமை வருவதையொட்டி குண்டுமல்லிக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளதும், பூக்களின் உற்பத்தி குறைந்துள்ளதுமே இந்த விலை ஏற்றத்துக்கு காரணம் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

திருவண்ணாமலை, ஆலங்காயம், சேலம், தருமபுரி, ஊத்தங்கரை, வேலூர், காவேரிப்பட்டணம் உள்ளிட்டப் பகுதிகளில் இருந்து குண்டுமல்லி ஒசூர் மற்றும் பெங்களூருக்கு விற்பனைக்காக அனுப்பப்படுகிறது.

பெங்களூரில் இருந்து அரபு நாடுகளுக்கும் விமானம் மூலம் குண்டு மல்லிகை விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

கடந்த ஒரு வாரமாக பூ வரத்து குறைந்துள்ளது. இதனால் பூக்களின் விலை மெல்ல உயர்ந்து வருகிறது. கிலோ | 50 முதல் | 150 வரை விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வந்த குண்டுமல்லி | 400-ஐ விரைவாக எட்டியுள்ளது.

முழம் 5 ரூபாய்க்கு குண்டுமல்லி பூ வாங்கி பழக்கப்பட்ட மக்கள், தற்போது முழம் | 20 விலைக்கு விற்பனை செய்வதைக் கண்டு அதிர்ச்சிக்கு ஆளாகியுள்ளனர்.

இதுகுறித்து ஒசூர் தாலுகா அலுவலக சாலையில் பூ வியாபாரம் செய்து வரும் பரணி கூறியது:

ஒரு வாரத்திற்கும் மேலாக குண்டுமல்லி வரத்து குறைந்துவிட்டது. இந்நிலையில், வெள்ளிக்கிழமை வரலட்சுமி பண்டிகை வருகிறது. இதனால் நாங்கள் முழம் | 20-க்கு விற்பனை செய்தால் மட்டுமே கட்டுப்படியாகும். பண்டிகை முடிந்ததும், மீண்டும் பூக்களின் விலையில் வீழ்ச்சி ஏற்படும் என்றார்.

**மாம்பழ கழிவில் மண்புழு உரம்!**

First Published : 19 Aug 2010 01:21:30 PM IST

கிருஷ்ணகிரி, ஆக.18: வீணாகும் மாம்பழ கழிவான மாம்பழத் தோலில் இருந்து தட்ரஅள்ளி உழவர் மன்ற விவசாயிகள் கடந்த ஓராண்டாக மண்புழு உரம் தயாரித்து வருகின்றனர்.

கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் உள்ளது தட்ரஅள்ளி கிராமம். இந்த கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் 3 ஆண்டுகளுக்கு முன் பையூர் வேளாண் மண்டல ஆராய்ச்சி மையத்தில் மண்புழு உரம் தயாரிப்பது குறித்த பயிற்சி பெற்றனர். பின்னர் தட்ரஅள்ளி உழவர் மன்றம் தொடங்கினர்.

தற்போது உழவர் மன்றச் செயலர் தேவன் (50), நிலத்தின் சிறிய பகுதியை மண்புழு உரம் தயாரிக்கும் கூடமாக மாற்றினார். அங்கு விவசாயிகளுக்கு தேவையான மண்புழு உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

2 தனியார் மாம்பழக் கூழ் தயாரிப்பு தொழிற்சாலைகளில் இருந்து கழிவாக வெளியேற்றப்படும் மாம்பழத் தோலை மண்புழு உரம் தயாரிக்க பயன்படுத்தி வருகின்றனர்.

இதுகுறித்து தேவன் கூறியது:

2 ஆண்டுகளுக்கு முன் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்தவரை பையூர் வேளாண் மண்டல ஆராய்ச்சி மையத்தில் சந்தித்தேன். அவரது நாட்டில் மாம்பழ கழிவிலிருந்து மண்புழு உரம் தயாரித்து விற்பதை அறிந்தேன்.

இந்த எண்ணத்தை சக விவசாயிகளுடன் கலந்தாலோசித்து, பரிசோதனை முறையில் மண்புழு உரம் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டோம். 3 அடி அகலம், 2 அடி உயரம், 15 அடி நீளம் கொண்ட 9 மண்புழுத் தொட்டிகள் அமைத்து விவசாயிகள் தங்கள் தேவைக்கு ஏற்ப மண்புழு உரங்களை தயாரித்து சொந்த பயன்பாட்டுக்கு பயன்படுத்தி வருகின்றனர் என்றார்.

கிராமங்களில் கால்நடைகளின் பயன்பாடு குறைந்துள்ள நிலையில், அவற்றின் கழிவுகள் கிடைப்பது அரிதாக உள்ளது. இதனால் கிடைக்கும் குறைந்த அளவு கால்நடை கழிவுகளுடன் மாம்பழ கழிவுகளை கலந்து மண்புழு உரம் உற்பத்தி செய்கிறோம்.

இந்த உரம் விளைநிலங்களின் மண்வளத்தை பாதுகாப்பதோடு, கூடுதல் மகசூல்
கிடைக்கவும் வழி செய்கிறது. விளைபொருள்களுக்கான உற்பத்திச் செல்வும் குறைந்துள்ளது என்று கிராமத்து விவசாயிகள் கூறினர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அதிக அளவில் மா சாகுபடி செய்யப்படுகிறது. இவற்றை சார்ந்து மாவட்டத்தில் 50-க்கும் மேற்பட்ட தனியார் மாம்பழ கூழ் தயாரிப்பு தொழிற்சாலைகள் உள்ளன. இவற்றில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகளால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுகிறது.

இந்நிலையில், தட்ரஅள்ளி உழவர் மன்ற விவசாயிகளின் முயற்சி மண் வளத்துக்கும்,
சுற்றுச் சூழலை பாதுகாக்கும் வகையிலும் அமைந்துள்ளது.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 78.88 அடி**

First Published : 19 Aug 2010 10:58:47 AM IST

ஈரோடு, ஆக. 18: பவானிசாகர் அணை நீர்மட்டம் புதன்கிழமை 78.88 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 666 கன அடி வீதம் தண்ணீர் வந்தது. அணையிலிருந்து பாசனத்துக்கு விநாயிக்கு 1,800 கன அடியும், ஆற்றில் விநாடிக்கு 100 கன அடியும் தண்ணீர் திறக்கப்பட்டுௌ்ளது. அணையிௌன் நீர் இருப்பு 14.79 டிஎம்சி.

**பந்தலூரில் தேயிலை விவசாயிகள் 2-வது நாளாக உண்ணாவிரதம்**

First Published : 19 Aug 2010 10:59:27 AM IST

கூடலூர், ஆக. 18: பந்தலூரில் தேயிலை விவசாயிகள் இரண்டாவது நாளாக தொடர் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். பந்தலூர் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலை நிர்வாகம் பச்சைத் தேயிலைக்கு நிர்ணயிக்கப்பட்ட விலையை வழங்க வலியுறுத்தி தொடர் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். 2-வது நாளான புதன்கிழமை தென்னிந்திய தேயிலை வாரியத்தின் செயல்

இயக்குநர் அம்பலவாணன் மற்றும் தேயிலை வாரிய உறுப்பினர் கோஷி பேபி ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தினர்.

÷மேலும், தேயிலை வாரியத்திற்குட்ட சில பிரச்னைகளை அடுத்து வரும் கூட்டத்தில் விவாதித்து முடிவெடுப்பது என்றும், அதுவரை பொருமை காக்க வேண்டும் என்ற கோரிக்கையை நிராகரித்து, கோரிக்கை நிறைவேறும் வரை தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை நட்ததுவது என்றும் கூட்டு நடவடிக்கைக் குழு முடிவெடுத்துள்ளது.

தினமலர்

**வேளாண் கருவிகள் வாங்க விவசாயிகளுக்கு மானியம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 20,2010,02:36 IST

திருவள்ளூர் : வேளாண்மை இயந்திரமயமாக்கல் திட்டத்தில், திருவள்ளூர் மாவட்டத்திற்கு, 10 டிராக்டர்கள், ஐந்து பவர் டில்லர்கள், 13 ரோட்டவேட்டர்கள் வழங்க, 9.35 லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள் ளது.தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தில், வேளாண் கருவிகள் மானிய விலையில் வழங்க, 168 கருவிகளுக்கு, 81 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

திருவள்ளூர் வேளாண்மை பொறியியல் துறை கட்டுப்பாட்டில் உள்ள உதவி செயற்பொறியாளர் (வேளாண்மை பொறியியல் துறை) திருவள்ளூர், திருத்தணி, பொன்னேரி அலுவலகங்களின் மூலம் விவசாயிகள் வேளாண் கருவிகள் வாங்க மானியம் வழங்கப்படுகிறது.40 எச்.பி., வரையுள்ள டிராக்டருக்கு மானியம் 45 ஆயிரம் ரூபாய், 8 எச்.பி.,க்கு மேல் திறன் கொண்ட பவர் டில்லருக்கு மானியம், 45 ஆயிரம் ரூபாய், ரோட்டவேருக்கு மானியம், 20 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது.

மானிய விவரம்: பலவகை தானியம் அடிக்கும் கருவி வாங்க 1.50 லட்சம் ரூபாய், களையெடுக்கும் கருவி 50 ஆயிரம், சிறிய டிராக்டர் 1.25 லட்சம், சக்தி வாய்ந்த தெளிப்பான் 20 ஆயிரம், சிறிய நெல் நடவு இயந்திரம் 1. 25 லட்சம், பெரிய நெல் நடவு இயந்திரம் நான்கு லட்சம், நெல் நாற்றங்கால் செய்யும் தானியங்கி கருவி ஒரு லட்சம், பண்ணை கருவிகள் வாங்க 5,000, நெல் நாற்றங்கால் தட்டு 10 ஆயிரம், பவர் டில்லர் 45 ஆயிரம், ரோட்டவேட்டர் 20 ஆயிரம், நெல் அறுவடை இயந்திரம் நான்கு லட்சம், மட்டை வெட்டும் கருவி 25 ஆயிரம், அக்ரி கிளினிக் அமைக்க எட்டு லட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது.

வேளாண் பொறியியல் துறை உதவி செயற் பொறியாளர், என்.ஜி.ஓ., காலனி, திருவள்ளூர் (9884436852), வேளாண் பொறியியல் துறை உதவி செயற் பொறியாளர், மாடர்ன் பள்ளி அருகில், பொன்னேரி (9443046696) வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர், மா.பொ.சி., சாலை, திருத்தணி (9443046696) ஆகிய அலுவலகங்களில் தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் ராஜேஷ் தெரிவித்துள்ளார்.

**வேளாண் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 20,2010,02:08 IST

கள்ளக்குறிச்சி : கள்ளக்குறிச்சி அடுத்த பெருமங்கலத்தில் நீர் வளம், நிலவளம் திட்டத் திற்கான விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி நடந்தது. ஊராட்சி தலைவர் வக் கீல் சண்முகம் தலைமை தாங்கினார். பாசன சங்க தலைவர் சோமசுந்தரம் முன்னிலை வகித்தார்.  கள் ளக்குறிச்சி வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் தங்கராஜ் விவசாயிகளுக்கான திட்டங்கள் குறித்து விளக்கி கூறினார்.  மேலும் சேலம் பிரியம் கலைக்குழுவினர் நீர் மேலாண்மை, நீரினை சிக்கனமாக பயன்படுத்தி கூடுதல் பரப்பில் விவசாயம் செய்வது குறித்து கலை நிகழ்ச்சிகள் நடத்தினர்.  இளநிலை பொறியாளர் செல்வமுத்துக்குமரன் நன்றி கூறினார்.

**துணை இயக்குனர் நம்பிக்கை "நிலக்கடலை சாகுபடி பரப்பு குறைய வாய்ப்பு இல்லை'**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 20,2010,02:12 IST

நாமக்கல்: "இந்திய அளவில் 15 முதல் 20 சதவீதம் வரை நிலக்கடலை சாகுபடிப் பரப்பு குறையும் என கணக்கிடப்பட்டுள்ளது. தமிழகத்தில் நிலக்கடலை சாகுபடி பரப்பு குறைய வாய்ப்பில்லை' என, மாவட்ட வேளாண் துணை இயக்குனர் (பொறுப்பு) சவுந்திரராஜன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கையில், முக்கிய எண்ணெய் வித்து பயிரான நிலக்கடலை, குஜராத்தில் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. தற்போது, இங்கு நிலக்கடலை சாகுபடி பரப்பு குறைந்துள்ளது. கடந்த ஆண்டு கரீப் பருவத்தில், இந்தியாவில் 52.89 லட்சம் ஹெக்டேரில் நிலக்கடலை பயிரிடப்பட்டது. குஜராத்தில் மட்டும் 18 லட்சம் ஹெக்டேரில் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டது.

இந்தாண்டு கரீப் பருவத்தில் இந்திய அளவில் 15முதல் 20 சதவீதம் வரை நிலக்கடலை சாகுபடி பரப்பு குறையும் என கணக்கிடப்பட்டுள்ளது. தமிழகத்தை பொறுத்தவரை சாகுபடி பரப்பு குறைய வாய்ப்பில்லை. மேலும், உற்பத்தி திறனும் நன்றாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

அதிகமான எண்ணெய் இறக்குமதி இருக்கும் போதிலும் 10 லட்சம் மெட்ரிக் டன் நிலக்கடலை உணவு பொருளுக்கு தேவைப்படுகிறது. விழாக்காலங்களில் தேவை அதிகரிப்பு, தற்போதுள்ள குறைவான நிலக்கடலை கையிருப்பு ஆகிய காரணங்களால், நிலக்கடலை விலை செப்டம்பர் முதல் டிசம்பர் 2010 வரை குவிண்டாலுக்கு 2,900 ரூபாய் முதல் 3,200 ரூபாய் வரை இருக்கும், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அக்டோபரில் கரும்பு அரவை கரும்பு பயிரிடுவோர் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 20,2010,02:14 IST

மோகனூர்: "மோகனூர் சர்க்கரை ஆலையில், அக்டோபர் மாதத்தில் கரும்பு அரவையை துவக்க வேண்டும்' என, கரும்பு பயிரிடுவோர் சங்கத் தலைவர் கருப்பண்ணன், செயலாளர் அஜிதன் ஆகியோர் சர்க்கரைத்துறை ஆணையருக்கு மனு அனுப்பி உள்ளனர்.

அந்த மனுவில் கூறியிருப்பதாவது:மோகனூர் சர்க்கரை ஆலைக்கு 2010-11ம் ஆண்டுக்கான அரவை பருவத்துக்கு பதிவு செய்துள்ள கரும்பின் அளவு கடந்த ஆண்டைவிட குறைவு. அதற்கு, கரும்புக்கு கிடைக்கக் கூடிய கொள்முதல் விலை போதிய அளவு இல்லாததும், நாமக்கல் மாவட்டத்தில் போதிய மழை பெய்யாததும் காரணம். நீர்பற்றாக்குறையும், அதிக பகல் நேர வெப்பம், இடைக்கணு புழு தாக்குதல் காரணமாக விளைச்சலில் பாதிப்பு ஏற்படும் சூழல் உள்ளது.

மோகனூர் சர்க்கரை ஆலையை சுற்றி உள்ள புகளூர், பள்ளிபாளையம், பெட்டவாய்த்தலை மற்றும் பெரம்பலூர் ஆகிய தனியார் ஆலைகளில் முன் கூட்டியே அரவை துவக்க திட்டமிட்டுள்ள நிலையில், மோகனூர் சர்க்கரை ஆலை அரவை பகுதியில் விவசாயிகள் சாகுபடி செய்து, பதிவாகாத கரும்பை தனியார் ஆலைக்கு வெட்டி அனுப்ப வாய்ப்பு உள்ளது.கரும்பின் அறுவடைக்கு முந்தைய முதிர்ச்சி குறித்து ஆய்வு செய்து, அதன் அடிப்படையில் அரவை பருவத்தை அக்டோர் மாதத்தில் துவங்க வேண்டும். ஆலை கோட்டப்பகுதியில் உள்ள கிராம சாலைகளை சீர்செய்ய வேண்டும்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 20,2010,01:48 IST

தர்மபுரி: தர்மபுரி கலெக்டர் அலுவலகத்தில் இன்று (ஆக., 20) விவசாயிகள் குறைதீர் கூட்டம் காலை 11 மணிக்கு நடக்கிறது.

கலெக்டர் அமுதா தலைமை வகிக்கிறார். வேளாண் துறை அதிகாரிகள் முன்னிலை வகிக்கின்றனர். தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள விவசாயம் சம்பந்தமான குறைகளை நேரிலும், மனுக்கள் மூலமும் தெரிவித்து, உரிய தீர்வு காணலாம்.

**நிறம் மாறும் மஞ்சள் இலை; விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 20,2010,00:31 IST

திருப்பூர் : நுண்ணூட்டச்சத்து குறைவு காரணமாக மஞ்சள் இலை நிறம் மாறி வருகிறது; விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.
கடந்தாண்டு, மஞ்சள் நல்ல விலைக்கு விற்பனையானது; விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். நடப்பு ஆண்டு விலை குறையாது என எதிர்பார்க்கப்படுகிறது. மஞ்சளுக்கு தொடர்ந்து நல்ல விலை கிடைப்பதால், திருப்பூர், கோவில் வழி, அமராவதிபாளையம், பொங்கலூர் என, மஞ்சள் பயிர் அதிகளவில் பயிரிடப் பட்டுள்ளது.
தற்போது, மஞ்சள் செடி நல்ல வளர்ச்சி பருவத்தை அடைந்துள்ளது. செடியின் இலை பழுப்பு நிறமாக மாறிவருவது, விவசாயிகளை கவலை அடையச் செய்துள்ளது.
தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் இக்னேஷியஸ் ரோச் கூறியதாவது: மஞ்சள் இலை பழுப்பு நிறமாக மாறி வருவதற்கு, நுண்ணூட்டச்சத்து குறைவே காரணம். போதிய நுண்ணூட்டச்சத்து இல்லாமல் பயிர் செய்தல், தொடர்ந்து ஒரே பூமியில் பயிரிடுதல் போன்ற காரணங்களால் இப்பிரச்னை உருவாகிறது. விளைநிலங்களில் சுழற்சி முறையில் பயிர் செய்தல் மூலம், இதுபோன்ற பிரச்னைகளை தவிர்க்கலாம்.
இதற்கு நுண்ணூட்டச்சத்து உரம் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. ஏக்கருக்கு ஐந்து கிலோ அளவில் மணலில் கலந்து அளிக்க வேண்டும்; மண்ணுடன் கலந்து அளித்தல், உரம் அளித்ததும் களையெடுத்தல் கூடாது. உரம் அளித்ததும் தண்ணீர் விடுதல் அவசியம். நுண்ணூட்டச் சத்து உரத்தை இரண்டு நாள் நீரில் ஊற வைக்க வேண்டும். ஒரு கிலோ உரத்துடன் 10 லிட்டர் தண்ணீர் சேர்க்க வேண்டும். கரைசல் நீரை வடிகட்டி தெளிக்க வேண்டும். மேலும் விபரங் களுக்கு வட்டார தோட்டக்கலை அலுவல கங்களை அணுகலாம், என்றார்.

**கி.புரத்தில் வாழை சாகுபடி பணி "ஜரூர்'**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 19,2010,03:02 IST

லாலாப்பேட்டை: கிருஷ்ணராயபுரம் தாலுக்கா பகுதியில், மழை கைகொடுத்த மகிழ்ச்சியில் வாழை சாகுபடி வேகமடைந்துள்ளது.கிருஷ்ணராயபுரம் தாலுகாவில் மாயனூர், மணவாசி, கட்டளை, திருக்காம்புலியூர், கிருஷ்ணராயபுரம், லாலாப்பேட்டை, மகிளிப்பட்டி, பிள்ளப்பாளையம், கருப்பத்தூர், வல்லம், புதுப்பட்டி பகுதியில் 5,000 ஏக்கர் பரப்பளவில் வாழை

சாகுபடி செய்யப்பட்டுள்ளது.இப்பகுதிகளில் அதிகமாக கற்பூரவள்ளி, பூவன், ரஸ்தாலி, பச்சைவாழை, நேந்திரம் ஆகிய இனங்கள் பயிரிடப்படுகிறது. 10 முதல் 12 மாதம் வரை வளரக்கூடிய வாழை, ஒரு ஏக்கருக்கு 800 முதல் 1,000 வரை நடப்படுகிறது. பராமரிக்க இரண்டு மாதத்துக்கு பிறகு தேவையான தண்ணீர் வசதி தடைபடாமல் இருக்க, வாழை கன்றுக்கு அருகே கிடங்கு வெட்டப்படுகிறது. இயற்கை உரமாக மாட்டு சாணம் போடப்படுகிறது.வாழையில் குலைக்கும் பருவத்தில், காற்று மற்றும் மழையில் மரம் சரிந்துவிடாமல் இருக்க சவுக்கு குச்சி மூட்டு கொடுக்கும் பணி நடக்கிறது. வாழைக்குலை வளர்ந்து 40 நாள் வரை மரம் பாதுகாப்பாக நிற்க இது வசதியாகிறது.வாழை சாகுபடி தற்போ தைய நிலை குறித்து விவசாயி அன்பழகன் கூறியதாவது:வாழை சாகுபடி கிருஷ்ணராயபுரம் பகுதியில் அதிகமாக உள்ளது. ஆடி, ஆவ ணி மாதங்களில் காற்று மற்றும் மழை மட்டுமே பயத்தை ஏற்படுத்தும். தற்போது வாழையை பாதுகாக்க குச்சியை மூட்டு கொடுக்கும் பணி நடக்கிறது.தற்போது நடப்பட்டுள்ள வாழையில், வரும் நவம்பர், டிசம்பர் மாதங்களில் வாழை தார் வெட்டப்படும். அனைத்தும் கோவை, நீலகிரி, திருச்சி மாவட்டங்களுக்கும், நேந்திரம் மட்டும் கேரளா, கர்நாடகாவுக்கும் விற்பனையாகிறது.தற்போதைய நிலையில் நல்ல வளர்ச்சி அடைந்த வா ழை தார் 120 ரூபாய் முதல் 150 ரூபாய் வரை விற்பனையாகிறது. இதே விலை நீடித்தால், ஓரளவு விவசாயி நஷ்டம் அடையாமல் காப்பாற்றப்படுவார்கள்.இவ்வாறு அவர் கூறினார்.சீசன் காலங்களில் அதிக அளவில் உற்பத்தியாகும் வாழையை, பாதுகாக்க குளிர்பதன கிடங்கும், மதிப்பூட்டப்பட்ட பொருளாக மாற்றி வணிகப்படுத்த ஒரு ஆலையும், பிற்பட்ட பகுதியான கிருஷ்ணராயபுரம்பகுதியில் அமைய விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**கொய்மலர் சாகுபடிக்காக உயர்ரக நாற்றுக்கள் இறக்குமதி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 19,2010,23:07 IST



கொடைக்கானல் : கொடைக்கானலில் கொய்மலர் நடவிற்காக முதன் முதலாக பெங்களூருவிலிருந்து உயர்ரக ரோஜா நாற்றுக்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இது பருவநிலைக்கு தாக்குபிடிக்கும் பட்சத்தில்விவசாயிகளுக்கும் பயிரிட ஆலோசனை வழங்கப் படும். தோட்டக்கலைத் துறை இணைஇயக்குனர் இமாமுதீன் கூறியதாவது: கொடைக்கானலில் கொய் மலர்கள் (பொக்கே பூ) சாகுபடிக்காக இதுவரை "கார்னேஷன், ஜெர்ப்பூரா போன்ற பூக்கள் மட்டுமே பயிரிடப்பட்டு வந்தது.

முதன் முறையாக அதிக லாபம் தரும் உயர்ரக ரோஜா செடிகளையும், பருவநிலைக்கு ஏற்றதாக உள்ளதா என சோதனை செய்ய வெளி மாநிலத்திலிருந்து 500 நாற்றுக்கள் கொண்டு வரப்பட்டுள் ளன. இந்த நாற்றுக்கள் கண்ணாடி மாளிகை அருகே நடவு செய்யப்பட உள்ளது. நடவு செய்த 30 நாட்களில் வளர்ந்து, விற்பனைக்கு தயாராகிவிடும். இந்த செடிகள் நல்ல வளர்ச்சியடைந்தால்,விவசாயிகளுக்கு பரிந்துரை செய்ய முடிவு செய்துள்ளோம். பூங்காவிலுள்ள நர்சரியில் அலங்காரச் செடிகள், வேர்குச்சிகள் விற்பனைக்கு உள்ளது. என்றார்.

**விதைப்பண்ணை மூலம் விதைகளை விற்க அழைப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 19,2010,23:28 IST

கம்பம் : விதைப்பண்ணை மூலம் சாகுபடி செய்து, விதைகளை விற்பனை செய்வதால், கூடுதல் லாபம் கிடைக்கும் என விதைசான்று அலுவலர் முருகேசன் தெரிவித் துள்ளார். அவர் கூறியுள்ளதாவது; விதைப்பண்ணை மூலம் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு சராசரியாக கிலோ ஒன்றுக்கு 20 ரூபாய் வரை கூடுதல் லாபம் கிடைக் கும்.

விதைப் பண்ணை மூலம் விவசாயிகள் புதிய தொழில்நுட்பம், தரமான விதைகள் உற்பத்தி செய்யும் முறைகளை கடைப்பிடித்து, விதைச் சான்றளிப்பு துறை மூலம் தரச்சான்று பெற்று, அதிக லாபம் அடையலாம்.

சராசரியாக விவசாயிகளுக்கு பாசிப்பயறு கிலோவிற்கு இன்றைய நிலவரப்படி 52 ரூபாய் கிடைக் கும். ஆனால் விதைப் பண்ணை மூலம் கிலோவிற்கு 73 ரூபாய் கிடைக்கும்.

மேலும் ஊக்கத் தொகையாக கிலோவிற்கு 10 ரூபாய் வரை கிடைக்கும். எனவே கம்பம் வட்டார விவசாயிகள் கம்பு, நிலக்கடலை, பாசிப்பயறு போன்றவற்றை விதைப்பண்ணை மூலம் சாகுபடி செய்து கூடுதல் மகசூல், கூடுதல் லாபம் பெற கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் என்றார்.

**பயிர் மகசூல் அதகிரிக்க நுண்ணுயிர்உரமிட வேளாண்மை அதிகாரி வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 20,2010,03:43 IST

திருநெல்வேலி:வேளாண்மையில் அதிக மகசூல் பெற நுண்ணுயிர் உரங்களை பயன்படுத்துமாறு விவசாயிகளுக்கு நெல்லை வேளாண்மை இணை இயக்குநர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.வேளாண்மையில் அதிக மகசூல் பெற பயிர்களுக்கு தேவைப்படும் பலவித சத்துக்களில் தழைச்சத்து இன்றியமையாததாகும். இச்சத்தை பூர்த்தி செய்ய ரசாயன உரங்களுக்கு பதிலாக நுண்ணுயிர் உரங்களை பயன்படுத்தலாம். இதனால் மண்வளம் அதிகரிக்கிறது. நுண்ணுயிர்களில் அசோஸ்பைரில்லம், ரைசோபியம் போன்றவை காற்றில் உள்ள நைட்ரஜன் வாயுவை பயிர்களுக்கு தேவையான தழைச்சத்தாக மாற்றும் தன்மையுடையது.

இந்த நுண்ணுயிர்கள் அங்கப்பொருளை மக்கச் செய்து மண்ணின் வளம், விதைகளின் முளைப்புத் திறன் மற்றும் வேரின் வளர்ச்சியை அதிகரிக் கின்றன.பயறுவகை பயிர்களுக்கு தழைச்சத்து அளித்திடும் ரைசோபியம் பயிரின் வேரில் உட்சென்று பயிருடன் இணைந்து வேர்முடிச்சுக்களை உண்டாக்கு கிறது. இது காற்றிலுள்ள நைட்ரஜன் வாயுவை தழைச்சத்தாக நிலைப்படுத்தி பயிர்களுக்கு எளிதில் கிடைத்திட உதவுகிறது.பாஸ்போ பாக்டீரியா இடுவதால் வேர் வளர்ச்சி அதிகமாகி பயிர் வறட்சியை தாங்கி வளரவும், கதிர்கள் பூத்து செழித்து வளரவும் உதவுகிறது.

அசோஸ்பைரில்லம், ரைசோபியம் மற்றும் பாஸ்போ பாக்டீரியா போன்ற நுண்ணுயிர்களை ஒரு ஏக்கருக்கு தேவையான விதையுடன் தலா ஒரு பொட்டலம் நுண்ணுயிரினை கால் முதல் அரை லிட்டர் ஆறிய வடிகஞ்சியுடன் கலந்து நிழலில் உலர்த்தி விதைத்திடலாம். பூச்சி, பூசணக்கொல்லி விதை நேர்த்தி செய்து ஒரு நாள் கழித்து விதைக்கு முன் நுண்ணுயிர் நேர்த்தி செய்திட வேண்டும். ஒரு ஏக்கருக்கு தலா 4 பொட்டலம் நுண்ணுயிரினை 20கிலோ மக்கிய தொழு உரத்துடன் கலந்து சீராக தூவி விடலாம். அசோஸ்பைரில்லம், ரைசோபியம் நுண்ணுயிர் உரங்களை பயன்படுத்துவதால் தழைச்சத்து உரத்தில் கால் பங்கும், பாஸ்போபாக்டீரியா நுண்ணுயிர் உரத்தை பயன்படுத்துவதால் மூன்றில் ஒரு பங்கு மணிச்சத்து ரசாயன உரங்கள் இடுவதையும் குறைத்து மண் வளத்தை காத்து அதிக மகசூல் பெறலாம்.இத்தகவலை நெல்லை வேளாண்மை இணை இயக்குநர் சுப்பிரமணியன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**நெல்லை மாவட்டத்தில் செம்மறி ஆடுகள் வளர்க்கரூ.10 கோடி பாங்க் கடன் உதவி வழங்க ஏற்பாடு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 20,2010,03:43 IST

திருநெல்வேலி:நெல்லை மாவட்டத்தில் செம்மறி ஆடுகள் வளர்க்க பாங்குகள் மூலம் 10 கோடி ரூபாய் கடன் உதவி வழங்கப்படுகிறது.நொச்சிகுளத்தில் சிறப்பு கால்நடை பாதுகாப்பு திட்ட இலவச மருத்துவ முகாம் நடந்தது. இதனை துவக்கி வைத்து கலெக்டர் ஜெயராமன் பேசியதாவது:நெல்லை மாவட்டத்தில் கால்நடை பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 3.31 லட்சம் செலவில் 276 இலவச கால்நடை மருத்துவ முகாம்கள் நடக்கிறது. மாவட்டத்தில் 19 பஞ்.,யூனியன்களில் மருத்துவ வசதி இல்லாத கிராமங்களில் நடத்தப்படுகிறது.

இம்முகாம்கள் மூலம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தல், தடுப்பூசி போடுதல், செயற்கை கருவூட்டல்கள், குடற்புழு நீக்கம், சினை பரிசோதனைகள் ஆகியவை இலவசமாக வழங்கப்படுவதோடு கால்நடைகளுக்கு தேவையான தீவன புற்களும் வழங்கப்படுகிறது.கால்நடை பராமரிப்பில் நவீன முறைகள் கையாளுவது குறித்தும் விவசாயிகளுக்கு பயிற்றுவிக்கப்படுகிறது. கடந்த ஆண்டு நடந்த 276 இலவச கால்நடை மருத்துவ முகாம்களில் 34 ஆயிரத்து 688 விவசாயிகளின் 3.43 லட்சம் கால்நடைகளுக்கு 3.31 லட்சம் செலவில் பல்வேறு சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளது.மாவட்டத்தில் நடப்பாண்டில் செம்மறி ஆடுகள் வளர்ப்பதற்கு 10 கோடி ரூபாய் கடன் உதவி பாங்குகள் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிராமப்புற பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் கால்நடைகளை வளர்த்து தங்கள் வாழ்வாதாரத்தை பெருக்கி கொள்ள வேண்டும்.இவ்வாறு கலெக்டர் பேசினார்.கால்நடைத் துறை மண்டல இணை இயக்குனர் சிவானந்தம், துணை இயக்குனர் மணிவண்ணன், உதவி இயக்குனர் சங்கரசுப்பிரமணியன், பஞ்., தலைவர் ஜெயராஜ், கால்நடை மருத்துவ பல்கலைக் கழக பேராசிரியர் செல்லப்பாண்டியன், கால்நடை வல்லுனர் நடராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்: கலெக்டர் பங்கேற்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 20,2010,02:50 IST

தூத்துக்குடி தூத்துக்குடியில் அனல்மின் நிலைய கட்டுமான பணிகள் நடக்கிறது. இதற்காக மிகப் பெரிய அளவில் பள்ளங்கள் தோண்டப்படும். அந்த பள்ளங்களை மூடுவதற்கு அதிகமான மணல் தேவைப்படும். இதற்காக குளத்தில் வெட்டி மணல் எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையான குளங்கள் தூர் வாரவேண்டும் என்ற ஆசை யும் நிறைவேறிவிடும் என்று விவ சாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட் டத்தில் கலெக்டர்

தெரிவித்தார்.தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் பிரகாஷ் தலைமையில் நேற்று நடந்தது.
பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் நாகராஜன், வேளாண்மை துணை இயக்குநர்கள் தனசிங்டேவிட், சீனிவாசன், உதவி இயக்குநர் பாலசிங் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மாவட்டம் முழுவதும் இருந்து விவசாய சங்க நிர்வாகிகள், அரசுத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர். குளங்களை தூர்வார வேண்டும். வரத்து கால்வாய்களை சீர் செய்ய வேண்டும். மடைகளை செப்பனிட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் தான் விவசாயிகளிடம் இருந்து அதிகமாக இருந்தது. மழைக்காலத்திற்கு முன்பாக இதனை சீர் செய்தால் நன்றாக இருக்கும். நெல் சாகுபடியும் முறையாக செய்ய முடியும் என்று விவசாயிகள் வலியுறுத்தினர்.

இதற்கு கலெக்டர் பிரகாஷ் பதில் அளிக்கையில், அரசிடம் இருந்து பொதுப்பணித்துறைக்கு வரும் பராமரிப்பு நிதியில் ஒவ்வொரு பணியாக செய்யப்படுகிறது.தொடர்ந்து பேசிய கலெக்டர், ஆறுமுகனேரிகுளம் மிகப் பெரிய குளம். இந்த குளத்தை எல்லாம் தூர்வார வேண்டும் என்றால் மிகப் பெரிய அளவில் செலவாகும். அந்த அளவிற்கு அரசிடம் இருந்து நிதி பெறுவதில் சிரமம் ஏற்படும்.இதனால் இம் மாவட்டத்தில் புதிய திட்டமாக அரசுக்கும் வருவாய் வரும். குளமும் தூர்வாரும் வகையில் மாவட்ட நிர்வாகம் புதிய நடவடிக்கை எடுத்துள்ளது. வரும் காலங்களில் இதுபோன்ற திட்டங்கள் மூலம் இம் மாவட்டத்தில் உள்ள பெரிய குளங்களை எல்லாம் தூர்வாரும் வாய்ப்பு இந்த திட்டத்தின் மூலம் கிடைக்கும்.

தூத்துக்குடியில் அனல்மின் நிலைய கட்டுமான பணிகள் நடக்கிறது. இதற்காக மிகப் பெரிய அளவில் பள்ளங்கள் தோண்டப்படும். அந்த பள்ளங்களை மூடுவதற்கு அதிகமான மணல் தேவைப்படும். இதற்காக குளத்தில் வெட்டி மணல் எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.இதற்காக திருச்செந்தூர் பகுதியில் உள்ள இரண்டு குளங்களை அனல்மின் நிலையத்திற்கு மணல் எடுக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கும் பல லட்ச ரூபாய் வருவாய் வருகிறது. குளமும் தூர்வாரப்படும் நிலை ஏற்படுகிறது. இந்த " டூ இன் ஒன்' திட்டம் மூலம் இந்த மாவட்டத்தில் உள்ள குளங்கள் அனைத்தும் தூர்வாறும் நிலை ஏற்படும்.

தூத்துக்குடியில் இருந்து கன்னியாகுமரி வரை கிழக்கு கடற்கரை சாலை ரோடுகள் போடப்பட உள்ளது. இதற்காக அரசு சுமார் 140 கோடி அனுமதித்துள்ளது. ரோட்டை உயர்த்துவதற்கு மண் தேவைப்படும். இன்னும் சில மாதங்களில் இந்த ரோடு போடும் பணி துவங்கும் போது ஆறுமுகனேரி குளத்தில் இருந்து மண் எடுப்பதற்கு மாவட்ட நிர்வாகம் அனுமதியளிக்கும். இதனால் அரசுக்கும் வருவாய் கிடைக்கும். ஆறுமுகனேரி குளமும் மராமத்து பெற்றுவிடும் என்றார்.

நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர் சத்தியமூர்த்தி, பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் நிர்மல்கிறிஸ்துதாஸ், உதவி பொறியாளர் ரகுநாதன், வேளாண்மை பொறியியல் துறை உதவி பொறியாளர் கணேஷ்பாபு, நுகர்பொருள் வாணிபக்கழக மண்டல மேலாளர் சிதம்பரம், அரசு போக்குவரத்துகழக துணை மேலாளர் கண்ணபிரான், விவசாய சங்க நிர்வாகிகள் நயினார்குலசேகரன், நிக்கோலஸ், கணபதிராமன், ரெங்கசாமி, தமிழ்மணி, அழகு மற்றும் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

**மல்லிகை பூ விலை கிடுகிடு உயர்வு : பூ வரத்தும் குறைந்ததால் கடும் கிராக்கி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 20,2010,02:52 IST

தூத்துக்குடி, : தூத்துக்குடி மாவட்டத்தில் இன்று அதிகமான முகூர்த்தம் இருப்பதால் பூ விலை வரலாறு காணாத அளவில் உயர்ந்துள்ளது. பூ வரத்தும் குறைவாக இருப்பதால் மல்லிகை, பிச்சிப்பூக்களுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. பூ மார்க்கெட்டிற்குள் நுழைய முடியாத அளவிற்கு கூட்டம் நேற்று நிரம்பி வழிந்தது.

ஆடி மாதத்தில் திருமணம் நடக்காது. ஒரு மாத இடைவெளி இருப்பதால் ஆவணி மாதத்தில் மிக அதிக திருமணங்கள் நடக்கும். பொதுவாக திருமணம் அதிகமாக நடக்கும் மாதங்களில் முதலிடம் பிடிப்பதும் ஆவணி மாதம் தான். ஆவணி மாதத்தில் முதல் முகூர்த்தம் அதுவும் வளர்பிறை முகூர்த்தம் இன்று இருப்பதால் தூத்துக்குடி மாவட்டத்திலேயே மிக அதிக எண்ணிக்கையில் இன்று திருமணம் நடக்கிறது. அதிக திருமணங்கள் நடப்பதால் திருமணத்திற்கு மிகவும் பிரதான தேவையான பூக்களின் விலை உச்சத்திற்கு சென்றுள்ளது. பூ வியாபாரிகளே மூக்கில் விரல் வைக்கும் அளவிற்கு வரலாறு காணாத அளவில் பூக்களின் விலை உயர்ந்திருப்பது தங்களுக்கே வியப்பாக இருப்பதாகவும், எந்த ஆண்டும் இல்லாத வகையில் இந்த ஆண்டு விலை அதிகரித்திருப்பதாகவும் பூ மார்க்கெட் வியாபாரி மாடசாமி தெரிவித்தார்.
இது குறித்து அவர் கூறுகையில், இன்று ஆவணி வளர்பிறை முதல் முகூர்த்தம் என்பதால் பூ விலை மிக அதிக அளவு உயர்ந்துள்ளது. ஒரு கிலோ மல்லிகைப்பூ, பிச்சிப்பூ நேற்று 300 முதல் 350 ரூபாய் வரை விற்பனையானது. சம்மங்கி பூ ஒரு கிலோவிற்கு 150 ரூபாய் முதல் 250 ரூபாய் வரை விற்பனையானது. தெய்வச்செயல்புரம், பேரூரணி, சென்னல்பட்டி, புதுப்பட்டி, புதியம்புத்தூர், ஆரைக்குளம் உள்ளிட்ட இடங்களில் இருந்து தூத்துக்குடி பூ மார்க்கெட்டிற்கு பூ வருகிறது. மார்க்கெட்டிற்கு 5 டன் பூ வந்து கொண்டிருந்தது. தற்போது இரண்டு டன் மட்டுமே பூ வந்து கொண்டிருப்பதால் பூக்களுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

வரத்து குறைவாக இருப்பதால் தான் விலை இந்த அளவிற்கு உயர்ந்துள்ளது என்றார்.இதே போல் மூன்று ரோஸ் பூ ரூ.10க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. நேற்று ஒரு ரோஸ் பூ 5 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. இன்னும் பத்து நாட்களுக்கு இதுபோன்று தான் விலை இருக்கும் என்று ரோஸ் பூ வியாபாரி கண்ணன் தெரிவித்தார்.இன்று அதிகமான முகூர்த்தநாள் என்பதால் தூத்துக்குடி பூ மார்க்கெட்டிற்குள் நேற்று மதியம் கூட்டம் அலைமோதியது. மார்க்கெட்டிற்குள் நுழைய முடியாத அளவிற்கு மக்கள் கூட்டம் அலைமோதியது. சில்லரை விற்பனையாக 100கிராம் மல்லிகைப்பூ 50 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டதாக சில்லரை வியாபாரிகள் தெரிவித்தனர்.

தினத் தந்தி

***நடப்பு 2009–10–ஆம் ஆண்டு பருவத்தில் இந்தியாவின் காபி உற்பத்தி 2.90 லட்சம் டன்னாக உயரும்***



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

பெங்களூர்

*நடப்பு 2009–10–ஆம் ஆண்டு பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) நம் நாட்டில் காபி உற்பத்தி 2.90 லட்சம் டன்னாக அதிகரிக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இது, சென்ற ஆண்டு பருவத்தை விட 10 சதவீதம் அதிகமாக இருக்கும். காபி உற்பத்தியில் பிரேசில் நாடு முதலிடத்தில் உள்ளது. வரும் காபி பருவத்தில் இங்கு மட்டுமல்லாமல் கொலம்பியா, இந்தியா*

மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளில் உற்பத்தி அதிகரிக்க உள்ளது. இதனால் சர்வதேச அளவில் உற்பத்தி உயரும் என சர்வதேச காபி அமைப்பு தெரிவித்துள்ளது.

மூன்றாவது இடம்

ஆசியாவில் காபி உற்பத்தியில் நம் நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது. உலக அளவில் ஆறாவது இடத்தில் உள்ளது. உலகின் மொத்த காபி உற்பத்தியில் இந்தியாவின் பங்களிப்பு சுமார் 4 சதவீதமாக உள்ளது. உள்நாட்டில் தென் மாநிலங்களில்தான் அதிகளவில் காபி உற்பத்தி ஆகிறது. நம் நாட்டில் மொத்தம் 9 லட்சம் ஏக்கர் பரப்பளவில் காபி உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது.

இந்தியாவில் காபி உற்பத்தியில் கர்நாடக மாநிலம் முதலிடத்தில் உள்ளது. நாட்டின் மொத்த காபி உற்பத்தியில் இம்மாநிலத்தின் பங்களிப்பு சுமார் 70 சதவீதமாகும். இங்கு குடகு, சிக்மகளூர் மற்றும் ஹசன் ஆகிய பகுதிகளில் அதிகளவில் காபி உற்பத்தி செய்யப்படுகிறது. இந்திய காபி உற்பத்தி துறை சுமார் 6 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளது. சர்வதேச அளவில் காபி உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் இந்தியாவின் பங்களிப்பு 3.5 சதவீத அளவிற்கே உள்ளது.

ஏற்றுமதி அதிகரிப்பு

நடப்பு பருவத்தில் அக்டோபர் முதல் ஏப்ரல் வரையிலான ஏழு மாதங்களில், காபி ஏற்றுமதி 29 சதவீதம் அதிகரித்துள்ளது. முழு பருவத்தில் ஏற்றுமதியின் தற்போதைய வேகம் குறைந்து 15 முதல் 20 சதவீதமே அதிகரிக்கும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. நாட்டின் மொத்த காபி உற்பத்தியில் 70 சதவீதம் ஏற்றுமதி செய்யப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

நடப்பு பருவத்தில் ஏற்றுமதியின் வளர்ச்சி வேகம் குறையும் நிலை உள்ளதால், வியட்நாம், இந்தோனேஷியா ஆகிய நாடுகளுக்கு இது சாதகமாக இருக்கும் என்று கூறப்படுகிறது. உலக அளவில் அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் அதிக அளவில் காபியை இறக்குமதி செய்து வருகின்றன. இந்த நாடுகளுக்கான ஏற்றுமதியில், நடப்பு பருவத்தில் இந்தியாவின் பங்களிப்பு குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 10.35%–ஆக குறைந்தது**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம், ஆகஸ்டு 7–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 10.35 சதவீதமாக குறைந்துள்ளது. இது, ஜூலை 31–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 11.40 சதவீதமாக இருந்தது.

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், முந்தைய ஆண்டின் இதே வாரத்தை விட, பல காய்கறிகளின் விலை 22.12 சதவீதத்திற்கும் மேல் குறைந்திருந்தது. குறிப்பாக, உருளைக்கிழங்கின் விலை 50 சதவீத அளவிற்கும், வெங்காயத்தின் விலை 6.91 சதவீதமும் குறைந்திருந்தது.

அதேசமயம், குறிப்பிட்ட சில தானியங்களின் விலை 7.40 சதவீதம் உயர்ந்திருந்தது. இதில், பருப்பு வகைகள் (18.32 சதவீதம்), அரிசி (8.27%) மற்றும் கோதுமை (7.63%) ஆகியவற்றின் விலை உயர்ந்திருந்தது. மேலும், பால் பொருள்கள், பழங்கள் ஆகியவற்றின் விலையும் அதிகரித்திருந்தது.

மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் நாட்டின் பணவீக்க விகிதம், சென்ற ஜூலை மாதத்தில் 9.97 சதவீதமாக குறைந்திருந்தது. கடந்த ஐந்து மாதங்களுக்கு பிறகு, அம்மாதத்தில் நாட்டின் பணவீக்க விகிதம் ஒற்றை இலக்கத்திற்கு குறைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.